# புதிய சமதர்மம்

புதிய உலகம் படைப்போம்

Puthiya samadharam

இதழ் 95 | ஜூலை ஆகஸ்ட் 2010 | விலை ரூபா 20/=


**எமது போராட்டம் யாழ்பாணத்தில் நடைபெறும்**

காணாமற் போனோரை தேடியறியும் குழு யாழ்பாணத்தில் காணாமற் போனோர் தொடர்பான போராட்டத்தை நடத்த உள்ளது. எனவே காணாமல் போனவர்களின் குடுபத்தினர் எம்முடன் தொடர்பு கொள்ளவும். காணாமற் போனோரை தேடியறியும் குழு இல. 17, பெரக் ஒழுங்கை, கொழும்பு 02.
தொ.பே. 2430621.

# தமிழ் மக்களின் ஐக்கியம் ஒன்று படவேண்டும்

வரலாற்றில் என்றும் இல்லாத அளவில் தமிழ் மக்கள் ஒடுக்கு முறைக்கு உள்ளாகி உள்ளனர். விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்பட்ட அயுதப் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளை நிர்மூலமாக்கும் செயற்பாடுகளில் பேரினவாதிகள் செயற்பட்டு வருகின்றனர்.

தமிழ் மக்களின் ஐக்கியம் பற்றி பலர் பேசுகின்றனர். இந்த ஐக்கியம் எதற்காக என்ற கேள்வியை கேட்கத் தோன்றுகின்றது. இலங்கை அரசை பலப்படுத்துவதற்கான ஐக்கியம் கோரப்படுகின்றதா? அல்லது இந்திய அரசின் நலன்களை பாதுகாப்பதற்காக ஐக்கியம் கோரப்படுகின்றதா? ஏனென்றால் இந்த இரண்டு சக்திகளின் நலன்களிற்கான செயற்பாடுகள் இன்று முனைப்புப் பெற்று வருகின்றன. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் வடக்கு கிழக்கு பகுதிகளில் பாரிய அச்சுறுத்தல் நிகழ்வுகள் தோன்றியுள்ளன. சிங்களக் குடியேற்றம், உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் நில அபகரிப்பு, தமிழப் பகுதியின் வளங்களை பல்தேசிய கம்பனிகளுக்கு தாரை வார்க்கப்படும் நிலைமை என்ற அபாய நிலைமைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. எனவே இத்தகைய அபாய நிலைமைகளில் இருந்து தமிழ் மக்களை காப்பாற்ற அனைவரும் ஐக்கியப்பட்டுச் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

வெளி நாட்டில் வாழும் தமிழ் மக்கள் பல்வேறு பிரிவுகளாக பிளவுண்டு கிடப்பது எம் மக்களுக்கு பெரும் கேடாக மாறியுள்ளது மிகவும் சிக்கல் நிறைந்த இந்த காலகட்டத்தில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் நிலைதடுமாறாது தமிழ் மக்களை வழிநடத்த வேண்டியது அவர்களின் பிரதான கடைமையாகும். எனவே இன்றைய காலகட்டத்தில் எவரினதும் நலன்களுக்காக அல்லாமல் முழுத் தமிழினத்தின் நன்மைக்காக தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இந்த ஐக்கியமானது வடக்கு கிழக்கு தமிழ்த் தாயகம் என்பதை வலியுறுத்த, உயர் பாதுகாப்பு பகுதிகளை மக்களிடம் கையளிக்க, வடக்கு கிழக்கில் நிறுவப்படும்

3ம் பக்கம்.......




**15** ஜூலை அன்று இரத்மலானையில் ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம்(UFL), அரசாங்க ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம்(GUFL), வர்த்தக கைத்தொழிலாளர் சங்கம்(CIWU), கூட்டுத்தாபன கூட்டுறவு வர்த்தக சேவையாளர் சங்கம்(CCMU) இணைந்து "உறுதி மொழி வழங்கப்பட்ட ரூபா 2500" சம்பள உயர்வு கோரி நடத்திய மறியல் போராட்டம்.

# வடக்கில் கொள்ளை

வடபகுதியில் அரசாங்கம் கூறுகின்ற வசந்தம் வீசவில்லை. மாறாக அங்கே கொள்ளையே நடைபெறுகிறது. இயற்கை வளங்களை சூறையாடும் நிகழ்வே இடம் பெறுகிறது. வலிகாமம் பகுதியில் சுண்ணாம்புக் கற்கள் பெரியளவில் தோண்டப்பட்டு தெற்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது. காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனம் கல் தோணடி எடுப்பதற்கு வாங்கிவிட்ட நிலப்பகுதியில் உள்ள கற்கள்யாவும் தோண்டி முடித்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

50 வருட காலப்பகுதிக்கு மேற்படி கற்களை எடுக்கும் திட்டமே காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை நிர்வாகத்திற்கு இருந்துள்ளது. ஆனால் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை இயங்காதநிலையில் கற்கள் யாவும் தோண்டி கொண்டு செல்லப்பட்டுள்ளது. காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை நிர்வாகத்தினர் முன்பு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு கீழ் ஆழமாக கற்களை தோண்டி எடுக்கவில்லை ஆனால் தற்போது அங்கே மிக ஆழமாக தோண்டி எடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. இந்த நிலைமைகளால் கடல் நீர் உட்புகும் அபாயம் தோன்றியுள்ளதாக தெரிகிறது. உயர் பாதுகாப்பு வலயம் எதற்காக உள்ளது என்பது தற்போது வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

கிளி நொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் காடு அழிப்பு என்ற போர்வையில் பெறுமதியான அரிய வகை மரங்கள் அழிக்கப் படுகின்றன. இந்த மரங்கள் எங்கே கொண்டு செல்லப் படுகின்றது. கடல் வளங்களும் பல் தேசிய கம்பனிகளுக்கு தாரைவார்க்கப் படுகின்றன. எனவே வடக்கின் வசந்தம் வடக்கை சுடுகாடாக மட்டுமே ஆக்கப் போகிறது.

# டி யூ குணசேகரா காட்டிக் கொடுத்துவிட்டார்

உதட்டளவில் சோசலிசமும் அடிமனதில் தேசிய வெறியும் கொண்டவர்□ என கார்ல்மார்க்ஸ் அன்று போலியான பொதுவுடமை வாதிகளை கண்டித்திருந்தார். அதை நிரூபிக்குமாற்போல் டி யூ குணசேகரா இன்று செயற்பட்டு வருகின்றார். மாகாணசபைக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கக்கூடாது என இவர் கூறியதன் மூலம் துரோகத்தின் உச்சிக்கே சென்றுவிட்டார் இனவாதிகளை விடுதலைப்புலிகள் தாக்கவில்லை எனக் கூறும் இவர் இனவாதிகளுடன் இணைந்து தமிழ் மக்களை கொன்று குவித்தமைக்கு என்ன சமாதானத்தை கூறுவார்.கம்யூனிஸ்ட் கட்சியின் 67வது ஆண்டுவழா நிகழ்வு அண்மையில் யாழ்பாணத்தில் நடைபெற்றுள்ளது அங்கே உரையாற்றிய அமைச்சர் டி யூ குணசேகராவின் உரையை பார்க்கும் போது அவர் பலவற்றை மறந்துள்ள நிலை தெரியவந்துள்ளது. அமைச்சர் டி யூ குணசேகரா எதை மறந்திருந்தாலும் வடபகுதியின் மூத்த கம்யூனிஸ்ட் கட்சி தோழர்களின் பெயர்களை கூட அவர் மறந்திருப்பதே கவலைதரும் விடயமாகும்.



வடபகுதியில் மிகப்பிரபல்யம் பெற்ற முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினரான பி.கந்தையாவை அவர் ஏ.கந்தையா என குறிப்பிட்டுள்ளார் மறைந்த கம்யூனிஸ்ட் கட்சியின்மாவட்ட செயலாளர் தோழர் விஜயானந்தனை விஜயகாந்தன் என குறிப்பிட்டுள்ளார். இலங்கை கம்யூனிஸ் கட்சி தமிழ் மக்களுக்கு மாத்திரம் துரோகத்தை புரியவில்லை தமது தோழர்களின் குடும்பங்களையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. உணமையில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அன்றல்ல இன்றும் துரோகமே செய்து கொண்டு இருக்கிறது.